4. எழுநூற்று ஐம்பத்தி மூன்று

| நூறு | பத்து | ஒன்று |
|---|---|---|
| | | |

5. அறுநூற்று அறுபது

| நூறு | பத்து | ஒன்று |
|---|---|---|
| | | |

6. இருநூற்று இருபது

| நூறு | பத்து | ஒன்று |
|---|---|---|
| | | |

7. முன்னூற்று நாற்பத்தி நான்கு

| நூறு | பத்து | ஒன்று |
|---|---|---|
| | | |

8. தொள்ளாயிரத்து தொன்னூற்று ஒன்பது

| நூறு | பத்து | ஒன்று |
|---|---|---|
| | | |

9. எழுநூறு

| நூறு | பத்து | ஒன்று |
|---|---|---|
| | | |

@KTBS
NOT TO BE REPUBLISHED

# குதித்து விளையாடக் கற்றுக்கொள்ளுங்கள்



புட்டு, மேரி மற்றும் ஜானு, தங்களது வீட்டில் வளர்க்கிற சில பிராணி, பறவைகளுடன், ஓய்வு நேரங்களில் விளையாடுவார்கள். அப்பிராணி - பறவைகள் இவர்களுக்கு, வெவ்வேறு முறையில் குதிப்பதற்கு குறிப்புகளைக் கொடுக்கின்றன. நீங்களும் அவர்களுடன் குதித்து விளையாடக் கற்றுக் கொள்ளுங்கள்.

NOT TO BE REPUBLISHED ©KTBS



ஒரு அடி முன்னோக்கி குதியுங்கள்

104, 105, 106, 107, 108, 109, 110, 111

ஒரு அடி பின்னோக்கி குதியுங்கள்

179, 180, 181, 182, 183, 184, 185, 186





இரண்டு அடிகள் முன்னோக்கி குதித்து, விடுபட்ட எண்களை எழுதுக.

390, 392, 394, ___, ___, 400, ___

இரண்டு அடிகள் பின்னோக்கி குதித்து, விடுபட்ட எண்களை எழுதுக.



286, ____, ____, ____, 294, 296, 298, 300



ஐந்து அடிகள் முன்னோக்கி குதித்து, விடுபட்ட எண்களை எழுதுக.

700, 705, 710, ____, ____, ____, ____, 735

ஐந்து அடிகள் பின்னோக்கி குதித்து, விடுபட்ட எண்களை எழுதுக.



____, ____, ____, ____, ____, 615, 620, 625

பத்து அடிகள் முன்னோக்கி குதித்து, விடுபட்ட எண்களை எழுதுக.



470, 480, ____, ____, ____, ____, ____, 540

பத்து அடிகள் பின்னோக்கி குதித்து, விடுபட்ட எண்களை எழுதுக.



____, ____, ____, ____, ____, 880, 890, 900

**விடப்பட்ட எண்களை பூர்த்தி செய்க:**



1. 300, 310, ____, ____, ____, ____, 360, ____
2. 400, 450, ____, ____, ____, ____, ____, 750
3. 800, 798, 796, ____, ____, ____, ____, 786
4. 201, 203, ____, ____, 209, ____, ____, 215
5. 999, 899, ____, ____, ____, ____, ____, 299
6. 675, 680, ____, ____, ____, ____, ____, 710

@KTBS NOT TO BE REPUBLISHED

# சிந்திக்க

1. சிண்ட்டு என்கிற முயல் மேற்கூரையின் மீது எப்படி ஏறுகிறது மற்றும் இறங்குகிறது என்பதை அம்புக் குறியீட்டால் குறிப்பிட்டு, படிகளின் மீதுள்ள எண்களைப் படித்துத் தெரிந்துக்கொள்க.




2. சம்பத் மற்றும் நிதி இருவரும் ஆற்றின் அக்கறைக்கு தங்களது நண்பர்களைக் காண்பதற்கு 200-வது பாறையிலிருந்து 600-வது பாறை வரையிலும் எப்படிக் குதித்துச் செல்ல வேண்டும்?




NOT TO BE REPUBLISHED

3. எலிக்கு தானியப் பையிலிருக்கிற தானியங்களைத் தின்னுவதற்கு ஆசை, ஆனால் செல்கின்ற பாதையின் இடையில் எலியின் எதிரிகளான பாம்பு மற்றும் பூனைகள் இருக்கின்றன. ஆனாலும், எலிக்குத் தானியங்களைத் தின்ன முடிந்தது. எப்படி?




@KTBS
NOT TO BE REPUBLISHED

## பாம்பின் உணவு




190-வது படியிலிருக்கிற பாம்பு தனக்கு முன்பு இருக்கும் உணவைத் தின்பதற்கு வழி தேடியது. அவற்றைப் பிடிக்க வேண்டுமென்ற பிடிவாதத்தினால் ஒவ்வொரு முறையும் 5 படிகளைத் தாண்டிக் குதித்து முன்னோக்கிச் சென்றது. உயிருக்குப் பயந்து நடுங்கிய தவளை ஒவ்வொரு முறையும் 3 படிகளை மட்டும் தாண்டிக் குதித்தது. எலிக்கு 2 படிகளாக மட்டும்தான் தாண்ட முடிந்தது. 198-வது படியிலிருக்கிற தவளை பாம்பிடம் அகப்பட்டுக் கொண்டுவிட்டது. 197-வது படியிலிருக்கிற எலி தப்பித்துக் கொள்கிறது. எப்படியென்று யோசியுங்கள். பாம்பு, தவளையை எத்தனாவது படியில் பிடித்துத் தின்றது என்பதை படத்தில் காண்பித்துள்ளபடி அம்புக் குறியால் குறிப்பிட்டு தெரிந்துகொள்க.

## பயிற்சி 2.3

**I.** பின்வரும் எண்களுக்கு அடுத்து வரும் எண்களை எழுதுக.

1. 99, ___
2. 200, ___
3. 350, ___
4. 409, ___
5. 175, ___
6. 630, ___
7. 899, ___
8. 998, ___
9. 799, ___
10. 529, ___

**II.** பின்வரும் எண்களுக்கு முன்னால் வரும் எண்களை எழுதுக.

1. ___ , 101
2. ___ , 300
3. ___ , 210
4. ___ , 490
5. ___ , 500
6. ___ , 650
7. ___ , 811
8. ___ , 777
9. ___ , 900
10. ___ , 700

@KTBS
NOT TO BE REPUBLISHED

**III.** பின்வரும் எண்களுக்கு இடையில் வரும் எண்களை எழுதுக.

1. 99, ___ , 101
2. 724, ___ , 726
3. 309, ___ , 311
4. 189, ___ , 191
5. 276, ___ , 278
6. 400, ___ , 402
7. 699, ___ , 701
8. 898, ___ , 900
9. 549, ___ , 551
10. 998, ___ , 1000

**IV.** எடுத்துக்காட்டிலுள்ளதைபோன்று, விடுபட்ட எண்களை எழுதுக.

எ.டு: 100, 105, 110, 115, 120, 125, 130, 135

1. 296, 298, ___ , ___ , ___ , 306, ___ , 310
2. 400, ___ , 420, 430, ___ , ___ , 460, ___ , 480
3. 801, ___ , ___ , 804, 805, ___ , ___ , 808

4. 900, 903, ___ , ___ , ___ , ___ , ___ , 921

5. 640, 660, ___ , ___ , ___ , ___ , ___ , 780

**V. எடுத்துக்காட்டிலுள்ளதுபோன்று, விடுபட்ட எண்களை எழுதுக.**

எ.டு.: 200, 198, 196, 194, 192, 190, 188, 186

1. 300, 295, ___ , ___ , ___ , ___ , ___ , 265
2. 500, 450, 400, ___ , ___ , ___ , ___ , 150
3. 800, 790, ___ , ___ , ___ , ___ , ___ , 730
4. 990, 970, 950, ___ , ___ , ___ , ___ , 850
5. 790, 789, ___ , ___ , ___ , ___ , ___ , 783

### மிகப்பெரிய எண்ணுடைய பிராணி எது?

@KTBS NOT TO BE REPUBLISHED

யானை மற்றும் மான் இவ்விருவரில் யாரிடம் இருக்கும் எண் பெரியது? என்பதைப் பற்றிய விவாதம் தொடங்கியது. இந்நேரத்தில், முயல் ஒன்று அங்கு வந்து, ''உங்களிடமிருக்கும் எண்ணைவிடப் பெரிய எண் என்னிடம் உள்ளது'' என்று விவாதித்தது. உடனே, எலியொன்று தானும் குறைந்தவனில்லையென்று ஓடி வந்தது.



‘‘என்னிடமுள்ள எண்தான் மிகப்பெரியது. உங்களிடம் இருப்பவை சிறியவை. வேண்டுமெனில், புத்திசாலியான நரியைக் கேட்கலாம்’’ என்று கூறியது.

யானை, மான், மற்றும் முயல் மூவருக்கும் எலியின் கூற்று சரியெனப்பட்டது. நால்வரும் சேர்ந்து நரியிடம் சென்று தங்களது பிரச்சனையைச் சொன்னார்கள்.

நரியும் நால்வரின் வாதங்களையும் கேட்டு, எலியிடம் இருக்கிற எண்தான் பெரியது, யானையிடமிருப்பது மிகச்சிறிய எண் என்று தீர்ப்பு வழங்கியது.

நரி வழங்கிய தீர்ப்பு சரியானதா? பின்வரும் கோடிட்ட இடங்களை நிரப்பி, நரியின் தீர்ப்பு சரியா/தவறா? என சோதிக்கவும்.

1. யானையிடமுள்ள எண் ___ , மானிடமுள்ள எண் ___ , இவ்விரண்டில் பெரிய எண் ___ .
2. மானிடமுள்ள எண் ___ , முயலிடமுள்ள எண்___ , இவற்றில் சிறிய எண் ___ .
3. முயலிடமுள்ள எண் ___ , எலியிடமுள்ள எண் ___ , இவ்விரண்டில் பெரிய எண் ___ .
4. மான் மற்றும் எலியிடமுள்ள எண்களுள் பெரியது ___ .
5. யானை மற்றும் முயலிடமுள்ள எண்களுள் சிறியது ___ .
6. யானை, மான் மற்றும் முயல்களிடமுள்ள எண்களுள் மிகப்பெரிய எண் ___ .
7. யானை, மான் மற்றும் முயல்களிடமுள்ள எண்களுள் மிகச்சிறிய எண் ___ .
8. யானை, எலி, முயல், இவைகளிடமுள்ள எண்களுள் மிகப்பெரியது ___ .

**கவனித்துத் தெரிந்து கொள்க**

மேற்கண்ட வினாக்களுக்கு விடையளிக்க உன்னால் முடிந்ததா? முடியவில்லையென்றால், பெரிய-சிறிய எண்களை அடையாளம் கண்டுபிடிப்பது எப்படி என்பதை பின்வரும் விளக்கங்களைக் கவனித்துத் தெரிந்து கொள்க.

© KTBS NOT TO BE REPUBLISHED

1. யானை, மான், முயல் மற்றும் எலி இவற்றின் உடலின் மீதுள்ள எண்களை இடமதிப்பு அட்டவணையில் எழுதுக.

| பிராணி | நூறு | பத்து | ஒன்று |
|---|---|---|---|
| முயல் | 3 | 2 | 5 |
| எலி | 4 | 7 | 5 |
| யானை | 1 | 5 | 7 |
| மான் | 2 | 6 | 3 |

நூறின் இடத்திலிருக்கிற எண்களை ஒப்பிடுக.

3,4,1,2 - இவற்றில் மிகப்பெரிய எண் – 4

மிகச்சிறிய எண் – 1

அதனால், 325, 475, 157, 263

இவற்றில் மிகப்பெரிய எண் – 475

மிகச்சிறிய எண் – 157

@KTBS
NOT TO BE REPUBLISHED

2. பின்வரும் கொடிகளின் மீது எழுதியிருக்கும் எண்களை கவனிக்கவும்.




இந்த எண்களை இடமதிப்பு பட்டியலில் எழுதுக.

| நூறு | பத்து | ஒன்று |
|---|---|---|
| 5 | 6 | 0 |
| 5 | 2 | 4 |
| 5 | 4 | 8 |
| 5 | 9 | 9 |
| 5 | 7 | 1 |

இங்கு நூறாவது இடத்திலுள்ள அனைத்து எண்களும் சமமாக (ஒன்றிற்கொன்று) உள்ளன. எனவே, பத்தாவது இடத்திலிருக்கிற எண்களை ஒப்பிடுக.

6, 2, 4, 9, 7 இவற்றில் மிகப்பெரிய எண் – 9

மிகச்சிறிய எண் – 2

அதனால், 560, 524, 548, 599, 571 இவ்வெண்களில்

மிகப்பெரிய எண் – 599

மிகச்சிறிய எண் – 524

3. பின்வரும் இலைகளின்மீது எழுதியிருக்கும் எண்களைக் கவனிக்க




இந்த எண்களை இடமதிப்பு அட்டவணையில் எழுதவும்.

| நூறு | பத்து | ஒன்று |
|---|---|---|
| 8 | 6 | 7 |
| 8 | 6 | 1 |
| 8 | 6 | 4 |
| 8 | 6 | 5 |
| 8 | 6 | 3 |

@KTBS NOT TO BE REPUBLISHED

இங்கு நூறாவது இடத்திலிருக்கிற எண்கள் அனைத்துமே ஒன்றுக்கொன்று சமமாக உள்ளன. அதேபோன்று பத்தின் இடத்திலுள்ள எண்களனைத்துமே சமமாக உள்ளன. எனவே, ஒன்றாம் இடத்திலிருக்கிற எண்களை ஒப்பிடுக.

7, 1, 4, 5, 3 இவற்றில் மிகப்பெரிய எண் – 7

மிகச்சிறிய எண் – 1

867, 861, 864, 865, 863 இந்த எண்களில்

மிகப்பெரிய எண் – 867

மிகச்சிறிய எண் – 861

## யாருக்கு அதிகம்? யாருக்கு குறைவு?

10-வது வகுப்புப் பொதுத் தேர்வில் மாணவர்கள் பெற்ற மதிப்பெண்கள் அவர்கள் கைகளிலுள்ளன. யாருக்கு அதிகம்? யாருக்கு குறைவு? சிந்தித்துக் கூறுக:




1. மிக அதிக மதிப்பெண்கள் ____
2. மிகக் குறைந்த மதிப்பெண்கள் ____
3. இருவர் பெற்ற சமமான மதிப்பெண்கள் ____
4. மாணவர்களில் அதிக மதிப்பெண் ____
5. மாணவிகளுள் அதிக மதிப்பெண் ____
6. மாணவர்களில் மிகக்குறைந்த மதிப்பெண் ____
7. மாணவிகளுள் மிகக்குறைந்த மதிப்பெண்____
8. 400 மதிப்பெண்களுக்கு 4 எண்கள் குறைவு ____
9. 500 மதிப்பெண்களைவிட 10 எண்கள் அதிகம் ____
10. 500 மதிப்பெண்களுக்கு 10 எண்கள் குறைவு ____

©KTBS
NOT TO BE REPUBLISHED

**கவனிக்க**

மூன்றிலக்க எண்களை ஒப்பிடுகையில், முதலில் நூறாவது இடத்திலிருக்கும் எண்ணை ஒப்பிடவும். அவற்றில் எந்த எண் மிகப்பெரியதோ, அந்த எண்தான் பெரிய எண்ணாகும். நூறாவது இடத்திலுள்ள எண்களனைத்தும் சமமாக இருந்தால், பத்தாவது இடத்திலுள்ள எண்களையும், பத்தாவது இடத்திலுள்ள எண்கள் சமமாக இருந்தால், ஒன்றாம் இடத்திலுள்ள எண்களையும் ஒப்பிட்டு பெரிய எண், சிறிய எண்களைக் குறிப்பிடவும்.

## ஏறுவரிசை - இறங்கு வரிசை

கடந்த வகுப்புகளில் ஓரிலக்க மற்றும் இரண்டிலக்க எண்களை ஏறுவரிசை - இறங்கு வரிசை முறையில் எழுதுவதை நீ கற்றிருப்பாய். இப்பொழுது, மூன்றிலக்க எண்களை ஏறுவரிசை-இறங்குவரிசை முறையில் எழுதுவதைத் தெரிந்து கொள்ளவும்.

**செய்து கற்றுக்கொள்க:**

999 வரையுள்ள எண்கள் எழுதியுள்ள சிறிய அட்டைகளைத் தயாரிக்கவும். அவற்றை ஒரு டப்பாவில் போடவும்.

டப்பாவிலிருந்து ஆறு சீட்டுகளை எடுக்கவும்.

உனக்குக் கிடைத்திருக்கும் எண்கள் 225, 352, 561, 833, 417, 799 எனில், நூறாவது இடத்திலிருக்கும் எண்களான 2, 3, 5, 8, 4, 7 முதலியவற்றை ஏறுவரிசையில் எழுதவும் - 2, 3, 4, 5, 7, 8

எண்களை ஏறுவரிசையில் எழுதவும் | 225, 352, 417, 561, 799, 833 |

| கொடுக்கப்பட்டுள்ள எண்களில் மிகச்சிறிய எண்ணிலிருந்து தொடங்கி, மிகப்பெரிய எண் வரை எழுதுவதே **ஏறுவரிசை** ஆகும். |

இதே எண்களை இறங்கு வரிசையில் எழுதவும்: | 833, 799, 561, 417, 352, 225 |

| கொடுக்கப்பட்டுள்ள எண்களில் மிகப்பெரிய எண்ணிலிருந்து தொடங்கி, மிகச்சிறிய எண் வரை எழுதுவதே **இறங்கு வரிசை** ஆகும். |

ஏறுவரிசை - இறங்கு வரிசையில் எழுதும் முறையை பின்வரும் படிகளில் எழுதிப் புரிந்துகொள்க.




NOT TO BE REPUBLISHED @KTBS

**நீங்களே முயற்சி செய்க**

உன்னுடைய நண்பன் டப்பாவிலிருந்து ஆறு துண்டுகளை எடுக்கவும்.

அவனுக்குக் கிடைத்த துண்டிலிருக்கிற எண்கள் 472, 477, 478, 475, 476, 473 எனில், முதலில் நூறாவது இடத்திலுள்ள எண்களைக் கவனிக்கவும். அனைத்தும் ஒரே எண்ணாக இருக்கிறது.

பிறகு பத்தாவது இடத்திலுள்ள எண்களைக் கவனிக்கவும். அவ்வெண்களும் ஒரே எண்ணாக உள்ளன. எனவே ஒன்றாம் இடத்திலிருக்கிற எண்களான 2, 7, 8, 5, 6, 3

இவற்றை இறங்கு வரிசையில் எழுதுக – 8, ___, ___, ___, ___, ___

எண்களை இறங்கு வரிசையில் எழுதுக – 478, ___, ___, ___, ___, ___

இதே எண்களை ஏறுவரிசையில் எழுதுக – 472, ___, ___, ___, ___ ___

**செய்து கற்றுக்கொள்க:**




NOT TO BE REPUBLISHED

படத்திலிருக்கும் பிராணிகளின் மீது சில எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன. எண்கள் மற்றும் பிராணிகளை ஒப்பிட்டு, பின்வரும் காலி இடங்களைப் பூர்த்தி செய்க.

**எண்களை ஏறுவரிசையில் எழுதுக**

☐ ☐ ☐ ☐ ☐

**எண்களின் ஏறுவரிசைக்குத் தகுந்த பிராணிகளின் பெயரை எழுதுக.**

☐ → ☐ → ☐ → ☐ → ☐

# பயிற்சி 2.4

**I.** கொடுக்கப்பட்டுள்ள எண்களில் பெரிய - சிறிய எண்களை அடையாளம் கண்டு எழுதுக.

| | மிகப்பெரிய எண் | மிகச்சிறிய எண் |
|---|---|---|
| **எ.கா:** 101, 110 | 110 | 101 |
| 1. 125, 521 | | |
| 2. 999, 909 | | |
| 3. 772, 774 | | |
| 4. 501, 105 | | |
| 5. 842, 824 | | |

**II.** கொடுக்கப்பட்டுள்ள எண்களுள் மிகப்பெரிய எண்ணின் அடியில் கோடு வரைக. 211, 112, 221, 121, 111

1. 811, 801, 810, 809, 812
2. 336, 346, 386, 316, 376
3. 666, 660, 665, 663, 667
4. 740, 770, 780, 710, 720
5. 901, 910, 920, 903, 902

NOT TO BE REPUBLISHED @KTBS

**III.** கொடுக்கப்பட்டுள்ள எண்களில் மிகச்சிறிய எண்ணின் அடியில் கோடு வரைக:

**எ.கா:** 327, 273, 372, 732, 237

1. 416, 406, 426, 462, 460
2. 700, 500, 200, 300, 400
3. 183, 187, 181, 190, 189

4. 572, 576, 571, 575, 574

5. 236, 216, 246, 276, 256

**IV.** இவற்றை ஏறு மற்றும் இறங்கு வரிசையில் எழுதுக.

**எ.கா :** 567, 467, 967, 767, 267

ஏறுவரிசை: 267, 467, 567, 767, 967

இறங்கு வரிசை: 967, 767, 567, 467, 267

1. 477, 873, 783, 580, 986

ஏறுவரிசை:

இறங்கு வரிசை:

2. 888, 808, 880, 80, 88

ஏறுவரிசை:

இறங்கு வரிசை:

3. 415, 428, 409, 472, 447

ஏறுவரிசை:

இறங்கு வரிசை:

4. 645, 642, 649, 647, 644

ஏறுவரிசை:

இறங்கு வரிசை:

5. 501, 301, 101, 601, 201

ஏறுவரிசை:

இறங்கு வரிசை:

6. 701, 770, 707, 77, 777

ஏறுவரிசை:

இறங்கு வரிசை:

@KTBS NOT TO BE REPUBLISHED

## எண்களை உருவாக்குதல்

| 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | ஒரே |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|

அளவுள்ள பத்து அட்டைகளைத் தயாரித்து ஒரு டப்பாவில் போடவும்.

பிறகு இடமதிப்பு, அட்டவணையை கீழ்க்காணும் வகையில் ஒரு வெள்ளைக் காகிதத்தின் மீதோ நிலத்திலோ வரையவும்.

| நூறு | பத்து | ஒன்று |
|---|---|---|
| | | |

**செயல்பாடு 1:**

டப்பாவிலிருந்து ஏதாவது மூன்று அட்டைகளை எடுக்கவும்.

எடுத்துக்காட்டாக, நீங்கள் எடுத்த அட்டைகள் 3 1 7 எனில்,

முதலில் மிகப்பெரிய எண்ணைக் கண்டுபிடிக்கவும்.

3 1 7 இவற்றில் மிகச்சிறிய எண் – 1

3 1 7 இவற்றில் மிகப்பெரிய எண் 7

பிறகு மிகச்சிறிய எண்ணை அடையாளம் காணவும்.

3 1 7 இவற்றில் மிகச்சிறிய எண் – 1

இப்பொழுது, மிகப்பெரிய எண்ணை நூறாவது இடத்திலும், மிகச்சிறிய எண்ணை ஒன்றாம் இடத்திலும், மீதமுள்ள எண்ணை பத்தாவது இடத்திலும் வைக்கவும்.

| நூறு | பத்து | ஒன்று | |
|---|---|---|---|
| 7 | 3 | 1 | = 731 |

பிறகு படிக்கவும் - எழுநூற்று முப்பத்தொன்று. படித்த இந்த எண் 731-ஐ நோட்டுப்புத்தகத்தில் எழுதவும்.

©KTBS NOT TO BE REPUBLISHED

பிறகு, இவ்வட்டைகளை எடுத்துக்கொண்டு, மிகச்சிறிய எண்ணை நூறாவது இடத்திலும் (ஸ்தானம்), மிகப்பெரிய எண்ணை ஒன்றாம் இடத்திலும், மீதியுள்ள எண்ணை பத்தின் இடத்திலும் வைக்கவும்.

| நூறு | பத்து | ஒன்று |
|---|---|---|
| 1 | 3 | 7 |

= 137

இப்பொழுது படிக்க - நூற்று முப்பத்தேழு

படித்த எண்ணை, அதாவது 137 - ஐ நோட்டுப்புத்தகத்தில் எழுது. அதற்குப்பிறகு, நோட்டுப்புத்தகத்தில் எழுதியிருக்கும் எண்களை ஒப்பிட்டுப் பார்க்கவும்.

731, 137 இவற்றில் மிகப்பெரிய எண்– 731

மிகச்சிறிய எண்– 137

எனவே,

3,1,7-ஐப் பயன்படுத்தி உருவாக்கக்கூடிய மிகப்பெரிய எண் . 731

3,1,7-ஐப் பயன்படுத்தி உருவாக்கக்கூடிய மிகச்சிறிய எண் : 137

@KTBS NOT TO BE REPUBLISHED

**செயல்பாடு: 2**

டப்பாவிலிருந்து மூன்று அட்டைகளை எடுக்கவும்.

எடுத்துக்காட்டாக, நீ எடுத்துள்ள அட்டைகள் – 4 9 0

இவ்வெண்களைப் பயன்படுத்தி, கீழ்க்காண்பித்துள்ளவாறு, வெவ்வேறு வகையில் இடமதிப்பு அட்டவணையில் எழுதி, படித்து, நோட்டுப்புத்தக்கத்தில் எழுதுக.

| நூறு | பத்து | ஒன்று | |
|---|---|---|---|
| 4 | 9 | 0 | – நானூற்று தொன்னூறு |
| 4 | 0 | 9 | – நானூற்று ஒன்பது |
| 9 | 4 | 0 | – தொள்ளாயிரத்து நாற்பது |
| 9 | 0 | 4 | – தொள்ளாயிரத்து நான்கு |
| 0 | 4 | 9 | – நாற்பத்தொன்பது |
| 0 | 9 | 4 | – தொன்னூற்று நான்கு |

நோட்டுப் புத்தகத்தில் எழுதியிருக்கும் எண்களை ஒன்றுக்கொன்று ஒப்பிட்டுப் பார்க்க.

490, 409, 940, 904, 049, 094

முதலில் நூறாவது இடத்தில் மிகப்பெரிய எண்ணை எழுதுக

940 மற்றும் 904

இவற்றில் பத்தாவது இடத்திலிருக்கும் எண்களை அடையாளம் காண்க.

4 மற்றும் 0. இவற்றில் 4 பெரியது

எனவே 940 மற்றும் 904 இவற்றுள் பெரிய எண் **940**

பிறகு, நூறாவது இடத்திலிருக்கும் மிகச்சிறிய இலக்கமான எண்களை எழுதுக.

049 மற்றும் 094

இவ்விரண்டில் பத்தாவது இடத்திலிருக்கும் எண்களை அடையாளம் காண்க.

4 மற்றும் 9 இவற்றில் 4 சிறிய எண் ஆதலால்,

049 மற்றும் 094 இவற்றில் சிறிய எண் **049**

எனவே,

4, 9, 0 இவ்வெண்களைப் பயன்படுத்தி உருவாக்கக்கூடிய மிகப்பெரிய எண் **940**

4, 9, 0 இவ்வெண்களைப் பயன்படுத்தி உருவாக்கக்கூடிய மிகச்சிறிய எண் **049**

©KTBS NOT TO BE REPUBLISHED

## பயிற்சி 2.5

**1. பின்வரும் எண்களைப் பயன்படுத்தி, மிகப்பெரிய எண் மற்றும் மிகச்சிறிய எண்களை உருவாக்குக.**

| | மிகப்பெரிய எண் | மிகச்சிறிய எண் |
|---|---|---|
| **எடு:** 2, 7, 0 | 720 | 027 |
| 1) 9, 1, 5 | | |
| 2) 6, 3, 7 | | |
| 3) 0, 9, 0 | | |
| 4) 5, 6, 0 | | |
| 5) 7, 8, 9 | | |

# எண்கோடு

**படத்தைப் பார்த்து விடையளிக்க**




1. 140ற்கும் 160-ற்கும் இடையிலிருக்கும் எண் ______

2. 180 என்ற எண் ....... மற்றும்.......... ற்கு இடையில் உள்ளது.

3. 120க்கு பின்னாலிருக்கும் எண் ______

4. 150-க்கு முன்னாலிருக்கும் எண் ______

5. 160-க்கு வலப்புறமிருக்கும் எண் ______

6. 110-க்கு இடதுபுறமிருக்கும் எண் ______

7. 140 என்ற எண் 170-க்கு ______புறத்திலுள்ளது (இடது/வலது)

8. 190 என்ற எண் 150-க்கு______புறத்திலுள்ளது (இடது/வலது))

**கவனிக்க**

★ எண் கோடு என்பது ஒரு நேர்கோடு

★ எண்கோட்டின் மீது, சம இடைவெளியில் எண்களை வரிசையாக எழுதவேண்டும்.

@KTBS NOT TO BE REPUBLISHED

★ ''எண்கோட்டுப் புள்ளியின் வலது புறம் நோக்கிச் செல்லச்செல்ல எண்களின் மதிப்பு அதிகமாகிக்கொண்டே இருக்கும்.''

எவ்வாறு என்பதை இந்த எடுத்துக்காட்டின் மூலம் அறிக.




அம்புக் குறியால் காண்பிக்கப்பட்டிருக்கும் 300-இன் வலது புறத்திலுள்ள எண்களைக் கவனிக்க. மதிப்பு அதிகரித்துக்கொண்டே செல்கிறது.

★ எண்கோட்டின் எந்தவொரு புள்ளியிலிருந்து இடது புறம் நோக்கி நகர்ந்து சென்றால் எண்களின் மதிப்பு குறைந்துகொண்டே போகும். எப்படி என்பதை இந்த எடுத்துக்காட்டின் மூலம் தெரிந்துகொள்க.




அம்புக் குறியீட்டால் காண்பிக்கப்பட்டிருக்கும் 580-இன் இடப்புறமிருக்கும் எண்களை கவனிக்க. மதிப்பு குறைந்து கொண்டே செல்கிறது.

**நீங்களே முயற்சி செய்க**

இக்கோட்டினைக் கவனித்து விடையளிக்க




1. 550 மற்றும் 650-க்கு இடையிலுள்ள எண் ______
2. 450 என்பது ______ க்கும் ______ க்கும் இடையில் உள்ளது.
3. 650-க்கு முன்னால் இருக்கும் எண் ______
4. 400-க்கு பின்னால் இருக்கும் எண் ______
5. 700 என்ற எண் 450-இன் ______ புறத்தில் உள்ளது (இடது/வலது)
6. 500 என்ற எண் 850-இன் ______ புறத்தில் உள்ளது. (இடது/வலது)

©KTBS NOT TO BE REPUBLISHED

## பயிற்சி 2.6

**I. பின்வரும் எண்கோட்டின்மீது, கொடுக்கப்பட்டுள்ள எண்களை கோடிட்டு குறிப்பிடுக.**

1) 600




2) 315



3) 702




4) 890




5) 910




## II. கொடுக்கப்பட்டுள்ள எண்கோட்டினைப் பார்த்து விடையளிக்க.




1) 428-க்கு வலப்புறமுள்ள எண்________

2) 416-க்கு இடப்புறமுள்ள எண் ________

3) 428-க்கும் 436-க்கும் இடையிலுள்ள எண். ________

4) 404 என்ற எண். ________ மற்றும் ________ எண்களின் இடையில் உள்ளது.

5) 412 என்ற எண் 428 இன் ________ புறமுள்ளது.

6) 416 மற்றும் 436 இல் ________ **பெரிய எண்**

*****

@KTBS NOT TO BE REPUBLISHED

# அலகு 3 கூட்டல்

S4B3S5

**இவ்வலகைக் கற்றபின் நீங்கள்,**

★ மூன்று இலக்க எண்களை நீள் வரிசையில் எழுதி இடமாற்றத்துடனும், இடமாற்றமில்லாமலும் கூட்டுவீர்கள்,
★ இடமதிப்பு அட்டவணையைப் பயன்படுத்தி கூட்டுவீர்கள்,
★ படங்கள் மற்றும் கதைகளில் வெளிப்படுத்தப்பட்ட வெவ்வேறு சூழல்களுக்குத் தக்கவாறு கூட்டல் கணக்குகளுக்குத் தீர்வு காண்பீர்கள்,
★ கூட்டல் கணக்குகளை உருவாக்குவீர்கள்,
★ 99-க்கு மிகாமல், கொடுக்கப்பட்டுள்ள இரண்டு எண்களின் மொத்தத்தைத் தோராயமாக்குவீர்கள்.

## கூட்டல் விளையாட்டு

ஹாய்! நான் பிங்கி. இது என்னுடைய முதலாளியின் வீடு. எவ்வளவு பெரியதாக இருக்கிறது அல்லவா! இதில் 100 அறைகள் இருக்கின்றன. சில அறைகளுக்கு வண்ணம் பூசவேண்டும்.

©KTBS NOT TO BE REPUBLISHED






5-வது அறைக்கு வண்ணம் பூசியிருக்கிறேன் பிறகு 15-வது அறைக்கு வண்ணம் பூசவேண்டும். அங்கு செல்வதற்கு 2 பாதைகளுள்ளன.

1. 5-வது அறையிலிருந்து ஒவ்வொரு அறையாகத் தாண்டி 15-வது அறையை சென்றடைவது.

   சிந்திக்கவும்: 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15 [5+10=15]

2. 5-வது அறையிலிருந்து ஒரே முறையில் மேல்பக்கமாக குதித்துச் செல்லுதல். அவ்வாறு குதிக்கையில், நான் 10 அறைகள் முன்னோக்கிச் சென்றாயிற்று. அதாவது 15-வது அறையை சென்றடைந்தாயிற்று.

   5 + 10 = 15




**சிந்திக்க.**

* 15-வது அறையிலிருந்து 45-வது அறைக்குச் செல்வதற்கு..........முறை மேலே குதிக்கவேண்டும்.

15 + ☐ = 45




அதே முறையில் 45-வது அறையிலிருந்து 66-வது அறைக்கு செல்வதற்கு, முதலில் இரண்டு 2 முறை மேல்நோக்கி குதிக்கவேண்டும். பிறகு வலதுபுறமாக ஒரு அறைக்குச் செல்ல வேண்டும்.

45 + 20 = 65

65 + 1 = 66




வேறொரு முறையிலும் செல்லலாம். 45-வது அறையிலிருந்து ஒரு அறைக்கு வலது புறமாகச் செல்லவும். 46-வது அறையிலிருந்து 2 முறை மேற்பக்கமாக குதித்து 66-வது அறைக்குச் செல்லலாம்.

© KTBS NOT TO BE REPUBLISHED

45 + 1 = 46

46 + 20 = 66




> 45-லிருந்து 66-வது அறைக்குச் செல்கையில் மொத்தம் எத்தனை அறைகளைத் தாண்டியிருக்கவேண்டும்? சிந்திக்க.

நீயே முயற்சி செய்து, கிடைத்த விடை எண்களிலிருக்கும் அறைக்கு வண்ணம் தீட்டவும்.

1. 66 + 10 = ______
2. 73 + 25 = ______
3. 29-வுடன் 9-ஐக் கூட்டினால் ..... ............
4. 15-வுடன் 13-ஐக் கூட்டினால்................
5. 30-வுடன் 20-ஐக் கூட்டினால்............

©KTBS NOT TO BE REPUBLISHED

**எளிதாகக் கூட்டுதல்**



**எடுத்துக்காட்டு:** நிதீஷ் மற்றும் நிர்மலா இருவரும் தங்களது தாயுடன் பழக்கடைக்குச் சென்றனர்.

நிதீஷ்: அம்மா, எனக்கு மாதுளம் பழம் பிடிக்கும்

நிர்மலா: அம்மா, எனக்கு தர்பூசணிப்பழம் பிடிக்கும்.

தாயும் நிர்மலாவிற்கு ரூ. 42 விலையுள்ள தர்பூசணிப் பழத்தையும், நிதீஷிற்கு ரூ. 49 விலையுள்ள மாதுளம் பழத்தையும் வாங்கிக் கொடுத்தார்.

தாய் கொடுக்க வேண்டிய மொத்தத் தொகையை பழக் கடைக்காரர் உடனடியாக கூட்டிச் சொன்னார்.

49 என்றால் 40 மற்றும் 9

42 என்றால் 40 மற்றும் 2

எனவே 49 மற்றும் 42 ரூபாய்களைக் கூட்டினால் மொத்தம் 91 ரூபாய்களாகும்.

**எடுத்துக்காட்டு :**

43 + 35 = 40 + 3 + 30 + 5
= 40 + 30+ 3 + 5
= 70 + 8
= 78







**எடுத்துக்காட்டு:** மற்றொரு முறையிலும் செய்யலாம்.

23 + 64 = 20 + 3 + 60 + 4
= 80 + 3 + 4
= 80 + 7
= 87.



@KTBS NOT TO BE REPUBLISHED

இதே முறையில், நீயே முயற்சி செய்க.

61 + 16 = 60 + ☐ + 10 + ☐
= ☐ + ☐ + ☐
= ☐ + ☐
= ☐

43 + 34 = ☐ + ☐ + ☐ + ☐
= ☐ + ☐ + ☐
= ☐ + ☐
= ☐

**சிந்திக்க: இதே முறையில் மூன்றிலக்க எண்களைக் கூட்டுவது எவ்வாறு?**

## ஒரு கதையைக் கேளுங்கள்...



ஒரு முறை நாகப்பாம்பு தனது நண்பர்களுக்கு விருந்து ஏற்பாடு செய்தது. தன்னால் துன்பம் அனுபவித்த எலி, தவளை மற்றும் கோழிகளின் குடும்பங்களையும் அழைத்திருந்தது.

இதுவரை, கிடைத்த இடங்களிலெல்லாம் தங்களைத் தின்று ஏப்பம்விட்ட நாகப்பாம்பின் இந்தத் தீர்மானத்தை எலி, தவளை மற்றும் கோழி நம்பவில்லை. அவை ஒன்றாகக் கூடி பாம்பின் அழைப்பை மறுத்தன.

பாம்பிற்கு மிகவும் நிராசையாயிற்று

''நீங்கள் உங்களைச் சார்ந்தவர்களை கணக்கிட்டு அழைத்து வாருங்கள். திரும்பிச் செல்கையிலும் எண்ணிக்கொண்டு செல்லுங்கள். நான் உங்களை ஒன்றும் செய்யமாட்டேன். நான் கூறுவது உண்மை என்னை நம்புங்கள். தயவுசெய்து எனது ஆசையை நிறைவேற்றுங்கள்'' என்று வேண்டிக் கொண்டது.

©KTBS NOT TO BE REPUBLISHED

பாம்பின் இச்சொற்களை அனைவரும் ஒப்புக் கொண்டனர். பெரிய பச்சைத் தவளையானது, அனைவரையும் அழைத்துக்கொண்டு வருதல் மற்றும் திரும்பி அழைத்துச் செல்வதற்கான பொறுப்பேற்றது. மொத்தம் 200 பேர்கள் வருவதாக பாம்பிடம் கூறியது.

பாம்பின் வீட்டிற்குச் செல்லுகையில், யார், எத்தனை பேர்கள் போன்றதை தவளை எண்ணியது. எலிகள்-46, கோழிகள்-37 தவளைகள்-109 பாம்பின் வீட்டிலிருந்து திரும்பப் புறப்பட்டிருக்கிற தவளைகள், கோழிகளின் மொத்த எண்ணிக்கை எத்தனை?

| | 100 | 10 | 1 |
|---|---|---|---|
| தவளைகள் எண்ணிக்கை: | 1 | 0 | 9 |
| கோழிகளின் எண்ணிக்கை: | | 3 | 7 |
| மொத்தம்: | **1** | **4** | **6** |



மொத்தம்: 1 ஒன்றினைக் குறிக்கிறது

10 பத்தின் குழுவைக் குறிக்கிறது

100 நூறின் குழுவைக் குறிக்கிறது.

**நிலை:1**

முதலில் ஒன்றுகளை மொத்தமாக எண்ணி 10 இன் குழுவாகச் செய்க. குழுக்களாக்கியதை வண்ணப் பென்சிலினால் கோடிழுத்துக் குறிப்பிடவும். அதனை 10-இன் குழுவிற்குச் சேர்த்துக்கொள்க. மீதமுள்ள ஒன்றுகளை விடையின் ஒன்றாவது இடத்தில் எழுதுக.

**நிலை:2**

பிறகு பத்தின் குழுவிலிருப்பதை சேர்த்து, விடையின் 10-வது இடத்தில் எழுதுக.

**நிலை:3**

பிறகு, நூறின் குழுவிலிருப்பதை சேர்த்து, விடையின் நூறாவது இடத்தில் எழுதுக.

NOT TO BE REPUBLISHED @KTBS

அவற்றை எண் வடிவில் எழுதுக.



ஒன்றின் குழுவில் 6



பத்தின் குழுவில் 4



நூறின் குழுவில் 1

எனவே, தவளை மற்றும் கோழிகளின் மொத்த எண்ணிக்கை-146. இப்பொழுது தவளை-கோழிகளின் மொத்த எண்ணிக்கையை எலிகளின் எண்ணிக்கையுடன் கூட்டுக.




| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தவளை-கோழிகளின் எண்ணிக்கை : | 1 | 4 | 6 | | | |
| எலிகளின் எண்ணிக்கை : | | 4 | 6 | | | |
| மொத்தம் : | | | | | | |

சிந்திக்க: பச்சைத் தவளை பாம்பிடம் 200 பேர் வருவதாகக் கூறியது. ஆனால் அத்தனை பேர்கள் இருக்கிறார்களா? என்ன ஆகியிருக்கும்?

1. எத்தனை வாழைக்குலைகள்?

ஒரு விவசாயி தனது தோட்டத்தில் 264 வாழைக்குலைகளைக் கடந்த ஆண்டிலும், 123 வாழைக் குலைகளை இவ்வாண்டும் வளர்த்தான். அப்படியென்றால், அவ்விவசாயி வளர்த்திருக்கிற மொத்த வாழைக் குலைகள் எத்தனை?



©KTBS NOT TO BE REPUBLISHED

கடந்த ஆண்டு வளர்த்த வாழைக்குலைகள் - 264

இவ்வாண்டு வளர்த்த வாழைக்குலைகள் - 123

**தோராயம்**

264+123 - இவற்றின் மொத்தம் 400-ஐ விட அதிகமாக அல்லது குறைவா?

இப்பொழுது, விடையைக் கண்டுபிடிக்க.

| | | | |
|---|---|---|---|
| கடந்த ஆண்டு வளர்த்த வாழைக் குலைகள் | 2 | 6 | 4 |
| இந்த ஆண்டு வளர்த்த வாழைக் குலைகள் + | 1 | 2 | 3 |
| **மொத்தம்** | | | |

விவசாயி வளர்த்த மொத்த வாழைக் குலைகள் = ☐

2. இரஜியாவிடம் 328 கோலிகள் இருந்தன. அவளுடைய தோழி கவனா அவளுக்கு 133 கோலிகளை அன்பளிப்பாகக் கொடுத்தாள். அப்படியானால், தற்போது, இரஜியாவிடம் இருக்கிற மொத்த கோலிகள் எத்தனை?

@KTBS NOT TO BE REPUBLISHED



விடையைக் கண்டுபிடிக்க.

| | 100 | 10 | 1 |
|---|---|---|---|
| | 3 | 2 | 8 |
| + | 1 | 3 | 3 |
| மொத்தம் | | | |

இரஜியாவிடமிருக்கிற மொத்த கோலிகள் = ☐

## பயிற்சி 3.1

**பின்வரும் கதைக் கணக்குக்குத் தீர்வு காண்க. விடையைக் கண்டுபிடிப்பதற்கு முன்பு மொத்தத்தை தோராயமாக்குக.**

1) அசோக் மற்றும் நிச்சிதா இருவரும் ரோஜாப்பூத் தோட்டங்களை வளர்த்தார்கள். அசோக்கின் தோட்டத்தில் 266 ரோஜாப்பூக்கள் பூத்திருக்கின்றன. நிச்சிதாவின் தோட்டத்தில் 314 ரோஜாப்பூக்கள் பூத்திருக்கின்றன. அப்படியென்றால், அவ்விருவரின் தோட்டங்களில் பூத்திருக்கிற மொத்தப் பூக்கள் எவ்வளவு?





| | | 100 | 10 | 1 |
|---|---|---|---|---|
| அசோக்கின் தோட்டத்தில் பூத்த பூக்கள் | | 2 | 6 | 6 |
| நிச்சிதாவின் தோட்டத்தில் பூத்த பூக்கள் | + | 3 | 1 | 4 |
| மொத்த பூக்கள் | | | | |

2. ஓடிக்கொண்டிருக்கின்ற இரயிலைக் கவனி. சி-1 பெட்டியினுள் 116 மக்கள் பயணித்துக் கொண்டிருக்கிறார்கள். சி-3 பெட்டியினுள் 130 மக்கள் பயணித்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படியானால், இரண்டு பெட்டிகளிலும் பயணிக்கின்ற மக்கள் மொத்தம் எத்தனை பேர்?




| | 100 | 10 | 1 |
|---|---|---|---|
| சி-1 பெட்டியிலிருக்கிற பயணிகள் | | | |
| சி-3 பெட்டியிலிருக்கிற பயணிகள் + | | | |
| மொத்தப் பயணிகள் | | | |

3) ஆசிரியர் ஒருவர் தனது பள்ளிக்கூடத்தில், பாடும் மற்றும் படம் வரையும் திறமைகளையுடைய மாணவர்களை அடையாளம் கண்டுபிடித்துள்ளார்.

| மாணவர்கள் | பாடுபவர்கள் | படம் வரைபவர்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| மாணவர்கள் | 112 | 284 | |
| மாணவிகள் | 121 | 248 | |
| மொத்தம் | | | |

**கண்டுபிடிக்க :**

1. பாடுகிற மாணவர்களின் மொத்த எண்ணிக்கை __________
2. பள்ளிக்கூடத்தில் படம் வரையும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை__________
3. பள்ளிக்கூடத்தில் பாடுகிற மற்றும் படம் வரைகின்ற மொத்த மாணவர்களின் எண்ணிக்கை. __________

NOT TO BE REPUBLISHED @KTBS

## கூட்டல்

## இடமாற்றமில்லாத கூட்டல்

கடந்த வகுப்பில் இரண்டிலக்க எண்களின் கூட்டலை நினைவு கூருங்கள். அதைப்போன்றே தொடர்ந்து செய்யுங்கள்.

**எடுத்துக்காட்டு : (1)**

348 மற்றும் 231-இன் மொத்தம் என்ன?

இந்த இரண்டு எண்களை படத்தில் காண்பித்துள்ளவாறு கூட்டுக.

| நூறு | பத்து | ஒன்று |
|---|---|---|



மேற்கண்ட படத்தை இடமதிப்பு அட்டவணையில் எண் வடிவில் இவ்வாறாக எழுதுக

| | நூறு | பத்து | ஒன்று |
|---|---|---|---|
| | 3 | 4 | 8 |
| + | 2 | 3 | 1 |
| = | 5 | 7 | 9 |

கூட்டலின் படி நிலைகள்

1. எண்களை அவற்றின் இடமதிப்பிற்கு தக்கவாறு நீள்வரிசையில் எழுதுக.
2. ஒன்றாவது ஸ்தான எண்களைக் கூட்டுக. 8+1=9 ஒன்றாவது ஸ்தானத்தில் 9-ஐ எழுதுக.
3. பத்தாவது ஸ்தான எண்களைக் கூட்டுக. 4+3=7 பத்தாவது ஸ்தானத்தில் 7-ஐ எழுதுக.
4. நூறாவது ஸ்தான எண்களை கூட்டுக. 3+2=5 நூறாவது ஸ்தானத்தில் 5-ஐ எழுதுக. எனவே, 348 மற்றும் 231-இன் மொத்தம் = 579

@NTB NOT TO BE REPUBLISHED

ஒரு கூடையில் 253 மாம்பழங்கள் இருக்கின்றன. மற்றொரு கூடையில் 323 மாம்பழங்கள் இருக்கின்றன. அப்படியானால். இரண்டு கூடைகளிலிருக்கின்ற மொத்த மாம்பழங்கள் எவ்வளவு?




253 + 323 = ?

| | நூறு | பத்து | ஒன்று |
|---|---|---|---|
| | 2 | 5 | 3 |
| | 3 | 2 | 3 |
| **மொத்தம்** | 5 | 7 | 6 |

| குழுக்கள் | | |
|---|---|---|
| நூறின் | பத்தின் | ஒன்றின் |
| 100 100 | 10 10 10 10 10 | 1 1 1 |
| 100 100 100 | 10 10 | 1 1 1 |
| 100 100 100 100 100 | 10 10 10 10 10 10 10 | 1 1 1 1 1 1 |

@KTBS NOT TO BE REPUBLISHED

நிலை 1 : முதலின் ஒன்றுகளைக் கூட்டுக 3+3=6

நிலை 2 : பிறகு பத்துகளைக் கூட்டுக 5+2=7

நிலை 3 : பிறகு நூறுகளைக் கூட்டுக 2+3=5

**மொத்தம் 576**

எனவே இரண்டு கூடைகளிலிருக்கின்ற மொத்த மாம்பழங்கள் [ ]

# விரிவான வடிவில் எழுதி கூட்டல்

422-உடன் 576-ஐ கூட்டுக

| | நூறு | பத்து | ஒன்று | விரிவான வடிவம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 4 | 2 | 2 | 400 | 20 | 2 |
| + | 5 | 7 | 6 | 500 | 70 | 6 |
| மொத்தம் | **9** | **9** | **8** | **900** | **90** | **8** |

422-உடன், 576-ஐக் கூட்டினால் மொத்தம் 998 ஆகும்.

**மற்றொரு முறை**

716-உடன் 243-ஐக் கூட்டினால் மொத்தம் 998 ஆகும்.

**படிநிலை 1: இடமதிப்பிற்குத் தகுந்தவாறு எண்களை நீள் வரிசையில் எழுதுக.**

| | நூறு | பத்து | ஒன்று |
|---|---|---|---|
| | 7 | 1 | 6 |
| + | 2 | 4 | 3 |
| | | | |

**படிநிலை 2: ஒன்றுகளை கூட்டி எழுது.**

| | நூறு | பத்து | ஒன்று |
|---|---|---|---|
| | 7 | 1 | 6 |
| + | 2 | 4 | 3 |
| | | | 9 |

**படிநிலை 3: பத்துகளை கூட்டி எழுது.**

| | நூறு | பத்து | ஒன்று |
|---|---|---|---|
| | 7 | 1 | 6 |
| + | 2 | 4 | 3 |
| | | 5 | 9 |

@KTBS NOT TO BE REPUBLISHED

**நிலை:4 நூறுகளைக் கூட்டி எழுதுக.**

| | நூறு | பத்து | ஒன்று |
|---|---|---|---|
| | 7 | 1 | 6 |
| + | 2 | 4 | 3 |
| | 9 | 5 | 9 |

இடமதிப்பு அட்டவணையைப் பயன்படுத்தாமல், எண்களை இடமதிப்புகளுக்கேற்ப எழுதி கூட்டுவதை பயிற்சி செய்க.

எடுத்துக்காட்டு: 253 மற்றும் 413-இன் மொத்தம் என்ன?

முதலில் இடமதிப்புகளுக்கேற்ப, ஒவ்வொரு எண்களையும் ஒன்றின்கீழ் ஒன்று வருமாறு எழுதுக. பிறகு கூட்டுக.

```
  2 5 3
+ 4 1 3
-------
  6 6 6
```

@KTBS NOT TO BE REPUBLISHED

**இதே முறையில் நீங்களே முயற்சி செய்க:**

1) 404 மற்றும் 440-இவற்றின் மொத்தம் எவ்வளவு?

2) 435, 543 - இவற்றின் மொத்தம் எவ்வளவு?

**எடுத்துக்காட்டு: (1)**

அண்ணன்-தங்கையரான ஸ்ருஜனும், பூஜாவும் இரண்டு டப்பாக்களில் பணத்தை சேமித்தார்கள். எண்ணிப் பார்க்கையில், ஸ்ருஜன் டப்பாவில் 248 ரூபாய்களும் பூஜாவின் டப்பாவில் 438 ரூபாய்களும் இருந்தன. அப்படியானால் அவ்விருவரும் சேகரித்து வைத்திருந்த மொத்தத் தொகை எவ்வளவு?



## இடமாற்றத்துடன் கூடிய கூட்டல்

**எடுத்துக்காட்டு:** (2) இரண்டிலக்க எண்களை இடமாற்றத்துடன் கூட்டுவதைப்போல மூன்றிலக்க எண்களையும் கூட்டுக.

466 மற்றும் 176-இன் மொத்தம் என்ன ?

இவ்விரண்டு எண்களையும் இடமாற்றத்துடன் பின்வரும் படத்தில் காண்பித்துள்ளவாறு கூட்டுக.




மேற்கண்ட படத்திலுள்ளவற்றை இடமதிப்பு அட்டவணையில் எண் வடிவில் இவ்வாறு எழுதுக.

| | நூறு | பத்து | ஒன்று |
|---|---|---|---|
| நூறு | 4 | 6 | 6 |
| | 1 | 7 | 6 |
| + | 6 | 4 | 2 |
| | 6 | 1 4 | 1 2 |

இடமாற்றத்துடன் மூன்றிலக்க எண்களின் கூட்டல் படிநிலைகள்

1. எண்களை அவற்றின் இடமதிப்பிற்கு தக்கவாறு நீள் வரிசையில் எழுதுக.
2. ஒன்றின் ஸ்தானத்தில் எண்களை கூட்டுக. 6+6 =12. ஒன்றாம் ஸ்தானத்தில் 2-ஐ எழுதுக. பத்தாம் இட 1-ஐ பத்தாவதுஸ்தானத்தில் எழுதுக.
3. பத்தாவது ஸ்தான எண்களைக் கூட்டுக. 1+6+7=14. பத்தாவது ஸ்தானத்தில் 4-ஐ எழுதுக. பத்தாம் இடத்தின் 1-ஐ நூறாவது ஸ்தானத்தில் எழுதிகொள்க.

© KTBS NOT TO BE REPUBLISHED

4. நூறாவது ஸ்தான எண்களைக் கூட்டுக. 1+4+1=6. நூறாவது ஸ்தானத்தில் 6-ஐ எழுதுக. எனவே 466 மற்றும் 176 இன் மொத்தம் = 642.

248 + 438 = ?

| | நூறு | பத்து | ஒன்று |
|---|---|---|---|
| | | 1 | |
| | 2 | 4 | 8 |
| + | 4 | 3 | 8 |
| | 6 | 8 | 6 |

குழுக்கள்




**படிநிலை:1**

முதலில் ஒன்றின் குழுவிலிருக்கும் அனைத்து ஒன்றுகளையும் ஒன்றாக எண்ணி, அவற்றை 10-இன் குழுக்களுக்குச் சேர்க்கவும் (படத்தில் காண்பித்துள்ளவாறு). மீதியுள்ள ஒன்றுகளை விடையின் ஒன்றாம் ஸ்தானத்தில் எழுதுக.

**படிநிலை 2:**

பிறகு பத்தின் குழுவிலிருக்கிற பத்துகளைக் கூட்டி விடையின் பத்தாம் ஸ்தானத்தில் எழுதுக.

**படிநிலை 3:**

அதற்குப்பிறகு, நூறின் குழுவிலிருக்கின்ற நூறுகளைக் கூட்டி விடையினை நூறாவது ஸ்தானத்தில் எழுதுக.

அதனால் ஸ்ருஜன் மற்றும் பூஜா சேமித்திருக்கிற மொத்தத்தொகை = 686 ரூபாய்கள் ஆகும்.

இதே முறையில்

296-ஐ 362-உடன் கூட்டுக.

296 + 362= ?

| நூறு | பத்து | ஒன்று |
|---|---|---|
| 1 | | |
| 2 | 9 | 6 |
| 3 | 6 | 2 |
| 6 | 5 | 8 |




@KTBS NOT TO BE REPUBLISHED

**படிநிலை:1**

முதலில் ஒன்றின் குழுவிலிருக்கும் அனைத்து  ஒன்றுகளையும் சேர்த்து (கூட்டி) ஒன்றாம் இடத்தில் விடையை எழுதவும்.

**படிநிலை:2**

பிறகு, பத்தின் குழுவிலிருக்கும் அனைத்து  பத்துகளையும் ஒன்றாகக் கூட்டி, 100-இன் குழுவில் சேர்க்கவும். (படத்தில் காண்பித்துள்ளவாறு) மீதமுள்ள பத்துகளை, விடையின் பத்தின் இடத்தில் எழுதுக.

**படிநிலை:3**

* நூறின் குழுக்களிலுள்ள  நூறுகளைக் கூட்டி விடையை நூறாவது இடத்தில் எழுதவும்.
* குழுக்களாக எழுதியுள்ள விடைகளை எண்ணி அவற்றை இடமதிப்புகளுக்கேற்றவாறு, எண்கள் வடிவத்தில் எழுதுக.

ஒன்றின் குழுவில் - 8

பத்தின் குழுவில் - 5

நூறின் குழுவில் - 6

எனவே, 296 மற்றும் 362-இன் மொத்தம் = 658

@KTBS NOT TO BE REPUBLISHED

**விரிவான வடிவத்தில் எழுதிக் கூட்டல்**

365 மற்றும் 246 இவற்றின் மொத்தத்தைக் கண்டுபிடிக்க.

| | நூறு | பத்து | ஒன்று |
|---|---|---|---|
| | 1 | 1 | |
| | 3 | 6 | 5 |
| + | 2 | 4 | 6 |
| | 6 | 1 | 1 |

| விரிவான வடிவம் | | |
|---|---|---|
| 100 | 10 | |
| 300 | 60 | 5 |
| 200 | 40 | 6 |
| 600 | 10 | 1 |

**மற்றொரு முறை**

* வகை 696-உடன் 146-ஐக் கூட்டுக.

**படிநிலை:1** இடமதிப்பிற்கேற்ப எண்களை நீள் வரிசையில் எழுதுக.

| நூறு | பத்து | ஒன்று |
|---|---|---|
| 6 | 9 | 6 |
| + 1 | 4 | 6 |
| | | |

**படிநிலை 2:** ஒன்றின் இடத்திலிருக்கும் எண்களைக்கூட்டி பத்தாவது இட எண்ணை, பத்தாவது இடத்திலேயே எழுதுக.

| நூறு | பத்து | ஒன்று |
|---|---|---|
| | 1 | |
| 6 | 9 | 6 |
| + 1 | 4 | 6 |
| | | 1/2 |

**படிநிலை 3:** பத்தின் இடத்திலிருக்கும் எண்களைக் கூட்டி பத்தாவது இட எண்ணை, நூறாவது இடத்தில் எழுதுக.

| நூறு | பத்து | ஒன்று |
|---|---|---|
| 1 | 1 | |
| 6 | 9 | 6 |
| + 1 | 4 | 6 |
| | 1/4 | 2 |

@KTBS NOT TO BE REPUBLISHED

**படிநிலை 4: நூறின் இடத்திலுள்ள எண்களைக் கூட்டி எழுதுக.**

| நூறு | பத்து | ஒன்று |
|---|---|---|
| 1 | 1 | |
| 6 | 9 | 6 |
| + 1 | 4 | 6 |
| 8 | 4 | 2 |

இடமதிப்பு அட்டவணையைப் பயன்படுத்தாமல், எண்களை இடமதிப்புகளுக்கேற்றவாறு எழுதி, கூட்டுவதைப் பயிற்சி செய்க.

**எடுத்துக்காட்டு:** 456 மற்றும் 367 - இவற்றின் மொத்தத்தைக் கண்டுபிடிக்க.

```
 1 1
  4 5 6
 +3 6 7
 ------
  8 2 3
```

**இதே முறையில் நீங்களே முயற்சி செய்க.**

1) 605 மற்றும் 387 இவற்றின் மொத்தத்தைக் கண்டுபிடிக்க.

2) 578 மற்றும் 277 இவற்றின் மொத்தத்தைக் கண்டுபிடிக்க.

**நினைவில் கொள்க:**

| | | |
|---|---|---|
| ✱ கூட்டப்படவேண்டிய எண் "கூட்டப்படும் எண்" எ.கா | | 825 |
| ✱ கூட்டவேண்டிய எண் "கூட்டும் எண்" | + | 112 |
| ✱ கூட்டி கிடைத்த விடை கூட்டுத்தொகை மொத்தம் | | 937 |

## பயிற்சி 3.1

**I. பின்வரும் எண்களை இடமதிப்பு அட்டவணையில் எழுதி, கூட்டுக.**

எடுத்துக்காட்டு: 500 + 301

| | நூறு | பத்து | ஒன்று |
|---|---|---|---|
| | 5 | 0 | 0 |
| + | 3 | 0 | 1 |
| | 8 | 0 | 1 |

1. 175 + 201

| | நூறு | பத்து | ஒன்று |
|---|---|---|---|
| | | | |
| + | | | |
| | | | |

2. 372 + 627

| | நூறு | பத்து | ஒன்று |
|---|---|---|---|
| | | | |
| + | | | |
| | | | |

3. 610 + 270

| | நூறு | பத்து | ஒன்று |
|---|---|---|---|
| | | | |
| + | | | |
| | | | |

4. 444 + 444

| | நூறு | பத்து | ஒன்று |
|---|---|---|---|
| | | | |
| + | | | |
| | | | |

5. 711 + 211

| | நூறு | பத்து | ஒன்று |
|---|---|---|---|
| | | | |
| + | | | |
| | | | |

@KTBS NOT TO BE REPUBLISHED

**II.** பின்வரும் எண்களை இடமதிப்பு அட்டவணையில் எழுதிக் கூட்டுக.

எ.டு. 172 + 179

| நூறு | பத்து | ஒன்று |
|---|---|---|
| 1 | 1 | |
| 1 | 7 | 2 |
| 1 | 7 | 9 |
| 3 | 5 | 1 |

1. 411 + 299

| நூறு | பத்து | ஒன்று |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

2. 362 + 428

| நூறு | பத்து | ஒன்று |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

3. 715 + 176

| நூறு | பத்து | ஒன்று |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

4. 628 + 325

| நூறு | பத்து | ஒன்று |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

5. 547 + 278

| நூறு | பத்து | ஒன்று |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

@KTBS NOT TO BE REPUBLISHED

**III.** எடுத்துக்காட்டைப் போன்று, பின்வரும் எண்களை நீள்வரிசையில் எழுதி மொத்தத்தைக் கண்டுபிடிக்க.

எடுத்துக்காட்டு : 427 + 132

```
  4 2 7
+ 1 3 2
  5 5 9
```

1. 333 + 555    2. 841 + 136    3. 504 + 405

4. 720 + 171    5. 205 + 473    6. 461 +28

**IV.** எடுத்துக்காட்டைப்போன்று, பின்வரும் கணக்குகளை நீள்வரிசையில் எழுதி, மொத்தத்தைக் கண்டுபிடிக்க.

**எடுத்துக்காட்டு** 527 + 284

```
  1 1
  5 2 7
+ 2 8 4
-------
  8 1 1
-------
```

1) 474 + 359    2) 684 + 310    3) 578 + 190

4) 336+478    5) 552 + 391    6) 481 + 888

@KTBS NOT TO BE REPUBLISHED

## செய்து மகிழ்க

படத்தில் கோபால் மற்றும் சுரேகா பிடித்திருக்கிற எண் அட்டைகளைக் கவனிக்கவும். பிறகு மாம்பழத்தின் மீது எழுதியிருக்கும் கூட்டல் கணக்குகளைச் செய்யவும். விடை 769 வருகின்ற பழங்களை கோபாலனிடமும் விடை 425 வருகின்ற பழங்களை சுரேகாவிடமும் கொடு. எந்தப்பழம் யாருக்கு என்பதைக் கோடிட்டுக் காண்பித்து, இருவருக்கும் பங்கிட்டப்பிறகு, மீதமுள்ள பழங்களை நீயே எடுத்துக்கொள்க.




©KTBS NOT TO BE REPUBLISHED

யாருக்கு எத்தனை பழம் கிடைத்தது? உனக்குக் கிடைத்த பழங்கள் எத்தனை?

## கணக்குகளை உருவாக்குதல்

இங்கே சில கூட்டல் கணக்குகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றின் விடைகளைக் கண்டுபிடியுங்கள். பிறகு விடைகளை ஒப்பிட்டுப்பாருங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 215 | 235 | 200 | 300 | 175 |
| + 115 | + 95 | + 130 | + 30 | + 155 |
| ____ | ____ | ____ | ____ | ____ |

ஒவ்வொரு கணக்கிலும் கிடைத்த விடை எவ்வளவு?

**330**

அப்படியென்றால், ஒரே விடை வருமாறு, பல முறைகளில் கூட்டல் கணக்குகளை உருவாக்கலாமல்லவா?

**நீங்களே முயற்சி செய்க:**

மேற்கண்ட முறையிலேயே, பின்வரும் எண்கள் விடையாக வருமாறு வெவ்வேறு வகைகளில் கணக்குகளை உருவாக்குக.

| எ.கா: | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| 90<br>+ 65<br>**155** | +<br>____<br>**155** | +<br>____<br>**155** | +<br>____<br>**155** | +<br>____<br>**155** |
| 150<br>+ 130<br>**280** | +<br>____<br>**280** | +<br>____<br>**280** | +<br>____<br>**280** | +<br>____<br>**280** |
| 388<br>+ 188<br>**576** | +<br>____<br>**576** | +<br>____<br>**576** | +<br>____<br>**576** | +<br>____<br>**576** |

@KTBS NOT TO BE REPUBLISHED

**செய்து மகிழ்க :**

**கணக்கு எங்கிருக்கிறது ?**

சரணனின் கையிலிருக்கும் விடை அட்டைக்குப் பொருத்தமான கணக்குகள் எந்தெந்த சாக்லேட்டுகளில் இருக்கின்றன, என்பதை கோடிட்டுக் காட்டுக.




© KTBS NOT TO BE REPUBLISHED

## பயிற்சி 3.2

**1. கோடு வரைந்து பொருத்திக் காட்டுக**

| விடை | கணக்கு |
|---|---|
| 1. 401 | 378 + 422 |
| 2. 919 | 467 + 53 |
| 3. 681 | 288 + 113 |
| 4. 800 | 478 + 441 |
| 5. 520 | 327 + 354 |

**II.** பின்வரும் ஒவ்வொரு எண்ணிற்கும் தகுந்தவாறு இரண்டு கணக்குகளை உருவாக்குக.

எ. கா: 499

| | |
|---|---|
| + 200 | + 385 |
| 299 | 114 |
| ______ | ______ |

1. 88
2. 222
3. 615
4. 378
5. 764
6. 300
7. 850
8. 705

@KTBS NOT TO BE REPUBLISHED

## தோராய மதிப்பீடு

**யாருடைய தோராய மதிப்பீடு சரி?**

படத்தை கவனிக்க. மல்லிகைக் கொடியின்கீழ் விழுந்திருக்கின்ற பூக்களின் எண்ணிக்கையைத் தோராயமாகக் கூறுக.



முப்பது

நாற்பது

முகமது அனுஷா

கீழே விழுந்திருக்கின்ற பூக்களை எண்ணி யாருடைய தோராய மதிப்பீடு சரியாக இருக்கிறது என்று பார்க்க. பூக்களின் எண்ணிக்கை 38 ஆக இருக்கிறது.

யாருடைய தோராய மதிப்பீடு சரியாக இருக்கிறது?

அனுஷாவின் தோராய மதிப்பீடு சரியாக இருக்கிறது. ஏனெனில், 38 என்பது 40-ற்கு அருகிலுள்ளது.

இப்பொழுது எண் கோட்டின் மூலம் புரிந்துகொள்க.




பத்தாம் இடத்திற்கு (இடமதிப்பு) தோராய மதிப்பீடு செய்வதை புரிந்துகொள்ளுதல்.

ஒரு எண்கோட்டை வரைந்து, 10 முதல் 20 வரையுள்ள எண்களை எழுதுக.




நடுவிலிருக்கும் எண்ணைக் குறிக்கவும். ஒன்றாம் ஸ்தானத்தில் 5 இருக்கிற எண்தான், இரண்டு பத்துகளுக்கு இடையில் உள்ள நடு எண்ணாகியிருக்கும்.

பிறகு இடப்பகுதி மற்றும் வலப்பகுதிகளைக் குறிக்கவும்.




எண்கோட்டிலிருப்பதைப்போன்று,

* 15-இன் இடப்புறத்திலிருக்கிற எண்களான 11, 12, 13, 14 இவை 10-க்கு அருகிலுள்ளன. எனவே, 11, 12, 13, 14-இன் பத்தாவது இடத்திற்கு தோராய மதிப்பீடு 10.
* 15-இன் வலப்புறத்திலிருக்கிற எண்களான 16, 17, 18, 19 இவை 20-க்கு அருகிலுள்ளன. எனவே 16, 17, 18, 19-இன் தோராய மதிப்பீடு 20.

@KTBS NOT TO BE REPUBLISHED




எந்த இரண்டு பத்துக்களின் நடுஎண்ணை அடுத்த பத்திற்குச் சரியாக தோராயமாக்குவது முறை. எனவே 15-இன் பத்தாம் இடமதிப்பிற்கு தோராய மதிப்பீடு 20.

**நீங்களே முயற்சி செய்க:**

இங்கே கொடுக்கப்பட்டுள்ள எண் கோட்டினை கவனிக்க. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.




1. 52-இன் பத்தாவது இடத்திற்குத் தோராய மதிப்பீடு ____________
2. 57-இன் பத்தாவது இடத்திற்குத் தோராய மதிப்பீடு ____________
3. 55-இன் பத்தாவது இடத்திற்குத் தோராய மதிப்பீடு ____________
4. 54-இன் பத்தாவது இடத்திற்குத் தோராய மதிப்பீடு ____________
5. 56-இன் பத்தாவது இடத்திற்குத் தோராய மதிப்பீடு ____________

**எடுத்துக்காட்டுகளைக் கவனிக்க:**

எ.கா: 43-இன் பத்தாவது இடமதிப்பிற்கு தோராய மதிப்பீடு என்ன?

* ஒன்றாவது இடத்தில் (ஸ்தானத்தில்) 5-ஐ விடக்குறைவான எண் உள்ளது. எனவே, அதற்கு பின்னாலிருக்கிற பத்தாவது ஸ்தான எண்ணை அப்படியே எழுது - 4.

* பிறகு, ஒன்றாவது இடத்தில் ஒரு 0 (பூஜ்யம்) எழுது.

4-க்கு அருகில் ஒன்றாம் இடத்தில் 0 எழுதினால் 40 ஆகிறது. எனவே, 43-இன் பத்தாவது இடமதிப்பிற்கு தோராய மதிப்பீடு 40.

எடுத்துக்காட்டு: 47-இன் பத்தாவது இடமதிப்பிற்குத் தோராய மதிப்பீடு எவ்வளவு?

* ஒன்றாம் இடத்தில் 5-ஐ விடப் பெரிய எண் உள்ளது. அதனால், பத்தாவது இடத்திலிருக்கிற இலக்கத்துடன் 1-ஐ கூட்டி எழுதுக.

பிறகு ஒன்றாம் ஸ்தானத்தில் ஒரு 0 எழுதுக. 5-க்கு அடுத்து ஒன்றாம் ஸ்தானத்தில் பூஜ்யத்தை எழுதினால் 50 ஆகிறது. எனவே 47-இன் பத்தாவது இடமதிப்பிற்கு தோராய மதிப்பீடு 50.

©KTBS NOT TO BE REPUBLISHED

**கவனிக்க**

* பத்தாவது இடமதிப்பிற்குச் சரியாக தோராயமாகக் குறிப்பிடுகையில் ஒன்றாம் ஸ்தானத்தின் இலக்கத்தைக் கவனிக்க.
* ஒன்றாம் ஸ்தானத்தில் 5-ஐ விடக் குறைவான எண்ணிருந்தால், முந்தைய பத்தாவது இடமதிப்பிற்கு சரியாகத் தோராயமாக்குக.
* ஒன்றாம் ஸ்தானத்தில் 5-ஐவிட அதிகமான எண்ணாகயிருந்தால், பிந்தைய பத்தாவது இடத்தில் சரியாகத் தோராயமாக்குக.

**நீங்களே முயற்சி செய்க:**

ஒன்றாம் இடத்திலுள்ள இலக்கங்களைக் கவனிக்க. பின்வரும் எண்களை பத்தாவது ஸ்தானத்திற்கு தோராய மதிப்பீடு செய்க.

1. 23-இன் பத்தாவது ஸ்தானத்திற்கு தோராய மதிப்பு ______
2. 66-இன் பத்தாவது ஸ்தானத்திற்கு தோராய மதிப்பு ______
3. 85-இன் பத்தாவது ஸ்தானத்திற்கு தோராய மதிப்பு ______
4. 78-இன் பத்தாவது ஸ்தானத்திற்கு தோராய மதிப்பு ______
5. 98-இன் பத்தாவது ஸ்தானத்திற்கு தோராய மதிப்பு ______

© KTBS NOT TO BE REPUBLISHED

கூட்டல் கணக்குகளைக் கொடுத்தால், மொத்தத்தைத் தோராயமாக்குவது எப்படி என்பதைத் தெரிந்துகொள்க.

**எடுத்துக்காட்டு** 1 : 46 மற்றும் 23-இன் மொத்தத்தைத் தோராயமாக்குக.

46-இன் தோராய மதிப்பு = 50

23-இன் தோராய மதிப்பு = 20

தோராய மொத்தம் = 70

எனவே 46 மற்றும் 23-இன் தோராய மொத்தம் = 70

**எடுத்துக்காட்டு** 2 : 21 மற்றும் 35-இன் மொத்தத்தைத் தோராயமாக்குக.

21-இன் தோராய மதிப்பு = 20

35-இன் தோராய மதிப்பு = 40

தோராய மொத்தம் = 60

எனவே, 21 மற்றும் 35-இன் தோராய மொத்தம் = 60.

**எடுத்துக்காட்டு 3 :** 55 மற்றும் 26-இன் மொத்தத்தைத் தோராயமாக்குக.

| | | |
|---|---|---|
| 55-இன் தோராய மதிப்பு | = | 60 |
| 26-இன் தோராய மதிப்பு | = | 30 |
| தோராய மொத்தம் | = | 90 |

எனவே, 55 மற்றும் 26-இன் தோராய மொத்தம் = 90

## பயிற்சி 3.3

**I. பின்வருபவற்றின் தோராய மொத்தம் கண்டுபிடிக்க.**

1. 62 மற்றும் 23
2. 29 மற்றும் 47
3. 71 மற்றும் 15
4. 58 மற்றும் 35

**II. அட்டையின் மீதுள்ள கூட்டல் கணக்குகளின் தோராய மொத்தம் கண்டுபிடிக்க. பிறகு உறைக்குப் பொருத்தமான அட்டையை கோடிட்டு காட்டுக.**




*****

@KTBS NOT TO BE REPUBLISHED

# கழித்தல்

P4D8G8

**இந்த அலகைக் கற்றபிறகு நீங்கள் :**

★ மூன்று இலக்க எண்களை நீள் வரிசையாக எழுதிக்கொண்டு, இடமாற்றமில்லாமலும், இடமாற்றத்துடனும் கழித்தல் கணக்குகளைச் செய்வீர்கள்,

★ இடமதிப்பு அட்டவணையைப் பயன்படுத்தி கழித்தல் கணக்குகளைச் செய்வீர்கள்,

★ படங்கள் மற்றும் கதைகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் வெவ்வேறு சூழ்நிலைகளுக்கேற்றவாறு கழித்தல் கணக்குகளுக்குத் தீர்வு காண்பீர்கள்,

★ கழித்தல் கணக்குகளை உருவாக்குவீர்கள்,

★ 99-க்கு மீறாமல், கொடுக்கப்பட்டுள்ள இரண்டு எண்களின் வித்தியாசத்தை தோராயமாக்குவீர்கள்.

## புத்தக வியாபாரம்

இரங்கண்ணனும், இராஜண்ணனும் பல வருடங்களாக நண்பர்களாக இருக்கிறார்கள். இருவரும் சாலையின் அக்கம்பக்கமாக புத்தகக் கடையை வைத்து வியாபாரம் செய்து வந்தார்கள்.




இரங்கண்ணனின் புத்தகக் கடையில் 468 புத்தகங்கள் இருக்கின்றன. இராஜண்ணனின் புத்தகக் கடையில் 365 புத்தகங்கள் இருக்கின்றன.

©KTBS NOT TO BE REPUBLISHED

நீங்கள் அறிந்ததுபோன்று,

இரங்கண்ணனின் கடையில் அதிகமான புத்தகங்கள் இருக்கின்றன.

இராஜண்ணனின் கடையில் குறைவான புத்தகங்கள் இருக்கின்றன.

**ஊகிக்க**

இராஜண்ணனின் கடையிலிருப்பதைவிட இரங்கண்ணனின் கடையிலிருக்கும் அதிகமான புத்தகங்கள் எத்தனை? 100-ஐ விட அதிகமா அல்லது 100-ஐ விட குறைவா?

இராஜண்ணனின் கடையிலிருப்பதைவிட இரங்கண்ணனின் கடையிலிருக்கும் அதிகமான புத்தகங்கள் எத்தனை என்பதை இப்பொழுது தெரிந்துகொள்க. பிறகு, நீ ஊகித்தது சரியா, தவறா என்று சோதித்துப்பார்க்க.

**இரங்கண்ணனின்** கடையிலிருந்த புத்தகங்கள்

இராஜண்ணனின் கடையிலிருந்த புத்தகங்கள்

| 100 | 10 | 1 |
|---|---|---|
| 4 | 6 | 8 |
| 3 | 6 | 5 |
| 1 | 0 | 3 |



இரங்கண்ணனின் கடையி**ல்** அதிக புத்தகங்கள் **உள்ளன.**

மேற்காண்பித்துள்ளவாறு,

முதலில், 1 ஒன்றின் குழுவிலிருப்பதை, கழித்து, மீதியுள்ள விடையை ஒன்றின் இடத்தில் எழுதுக.

பிறகு 10 இன் குழுவிலிருக்கின்ற எண்ணை கழித்து மீதியுள்ளதை, விடையின் பத்தாவது இடத்தில் எழுதுக.

அதற்குப்பிறகு 100 இன் குழுவிலிருப்பவற்றைக் கழித்து, விடையின் நூறாவது இடத்தில் எழுதுக.

பிறகு, அவற்றை எண் வடிவில் எழுதுக.

1 இன் குழுவில் 3

10 இன் குழுவில் 0

100 இன் குழுவில் 1

@KTBS NOT TO BE REPUBLISHED

எனவே, இரங்கண்ணனின் கடையில், இராஜண்ணனின் கடையிலிருப்பதைவிட 103 புத்தகங்கள் **அதிகமாக உள்ளன.**

நீங்களே முயற்சி செய்க:




சுஷ்மிதா கடையிலிருந்து வாங்கிய புத்தகத்தின் விலை ரூபாய் 150 ஆகும். அவள் கடைக்காரனுக்கு ரூ. 200-ஐக் கொடுத்தாள் (100 ரூபாய் நோட்டுகள் இரண்டு) அப்படியென்றால், கடைக்காரன் சுஷ்மிதாவிற்கு திருப்பிக்கொடுக்கவேண்டிய மீதித் தொகை எவ்வளவு?




| | | 100 | 10 | 1 |
|---|---|---|---|---|
| சுஷ்மிதா கடைக்காரனிற்குக் கொடுத்த பணம் | ₹ | 2 | 0 | 0 |
| அவள் வாங்கிய புத்தகத்தின் விலை | ₹ | 1 | 5 | 0 |
| | | | | |




கடைக்காரன் சுஷ்மிதாவிற்கு கொடுக்கவேண்டிய மீதித் தொகை=?

சுஷ்மிதாவிற்கு கடைக்காரன் கொடுக்கவேண்டிய மீதித் தொகை ரூ. ____

@KTBS NOT TO BE REPUBLISHED

# குரங்கிற்கு உதவி செய்க

ஒரு முறை காட்டில் நரி வாழைப்பழ வியாபாரத்தை தொடங்கியது. காட்டிலிருக்கின்ற குரங்குகளுக்கும் யானைகளுக்கும் மகிழ்ச்சியோ மகிழ்ச்சி.



@KTBS NOT TO BE REPUBLISHED

குரங்கு பழங்களை வாங்குவதற்காக 274 ரூபாய்களை சேகரித்து வைத்திருந்தது. அத்தொகையை எடுத்துக்கொண்டு நரியின் கடைக்கு வந்தது. 158 ரூபாய்களுக்கு ஒரு வாழைக்குலையை வாங்கிக் கொண்டது. நரி கணக்கில் அறிவாளி என்று, குரங்கு தன்னிடமிருக்கும் அனைத்துத் தொகையையும் கொடுத்து, 274 ரூபாய்களில் 158 ரூபாய்களை எடுத்துக்கொண்டு மீதமுள்ள தொகையை திரும்பிக் கொடுக்கக்கூறியது. நரியும், குரங்கிற்கு 76 ரூபாய்களை திரும்பக் கொடுத்தது.

அப்படியென்றால், குரங்கிற்கு நரி திரும்பக் கொடுத்த தொகை சரியாக இருக்கிறதா?

**ஊகிக்க!**

நரி குரங்கிற்குத் திரும்பக் கொடுத்த தொகை எவ்வளவு?

திரும்பக் கொடுக்கவேண்டிய தொகை

100 ரூபாயைவிட அதிகமா அல்லது குறைவா?

| | 100 | 10 | 1 |
|---|---|---|---|
| குரங்கு கொடுத்த பணம் ரூ | 2 | 6 ~~7~~ | 1 4 |
